UNITED NATIONS NATIONS UNIES

**செயலாளர் நாயகம்**

**--**

உலக காட்டுயிர்கள் தின செய்தி

2022 மார்ச் 03

ஒவ்வொரு வருடமும், உலக காட்டுயிர் தினத்தில், நாம் புவியிலுள்ள காட்டுத் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அழகையும் அதிசயங்களையும் கொண்டாடுகின்றோம். நாம் ஏன் காட்டுயிர்கள் குறித்து அக்கறை கொள்ள வேண்டும்? அது புவியின் நீடிப்புக்கு பங்களிப்பதற்கான எமது தார்மீகக் கடமை என்பதற்கு அப்பால், மனிதகுலமானது உணவு மற்றும் குடிநீர் முதல் மாசடைவுக் கட்டுப்பாடு மற்றும் காபன் சேமிப்பு வரை இயற்கை எமக்களிக்கும் அத்தியாவசிய உற்பத்திகள் மற்றும் சேவைகளில் தங்கியுள்ளது. இயற்கை உலகை அழிப்பதன் ஊடாக நாம் எமது நல்வாழ்வுக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றோம்.

இன்று, உலகம் எங்கிலும், காட்டுயிர்கள் பேரிடரை எதிர்நோக்கியுள்ளன. கால்வாசி அளவிலான உயிரினங்கள் முற்றாக அழியும் அபாயத்தில் உள்ளன, ஏனெனில் அவை வாழும் சூழற்தொகுதியை நாம் அழித்துவிட்டோம். இந்த முறையை மாற்றியமைக்க நாம் இப்பொழுதே செயற்பட வேண்டும்.

இந்த வருடத்தின் உலக காட்டுயிர் தினமானது சூழற்தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான ஐநா தசாப்தத்தின் (2021 – 2030) முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. பங்களிக்கும் உயிரினங்கள் நலமாக இருக்கும்போது மாத்திரமே சூழல் தொகுதிகள் ஆரோக்கியமாக இருக்கும். முக்கிய உயிரினம் ஒன்று அழிந்துவிட்டால் ஒரு முழுமையான சூழற்தொகுதி நலிவடைந்து அழிந்துவிடலாம். ஆகவேதான் தனியொரு உயிரினத்தை பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் முழுமையான சூழற்தொகுதிகளை மறுசீரமைக்கும் விதமாக ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

இந்த உலக காட்டுயிர் தினத்தில் எமது தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரது நலன்களுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் விலை மதிப்பற்ற, பிரதியீடு செய்ய முடியாத காட்டுயிர்களை பாதுகாப்பதற்கு உறுதிகொள்வோம்.